**பிபில பிரதேச சபை**
**மொனறாகலை மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 மார்ச் 26 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2018 ஜூன் 26 ஆந் திகதி தலைவருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர்த்து, பிபில பிரதேச சபையின் 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டு குறைபாடுகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டில் நிர்மாணிக்கப்பட்ட நீர் சுத்திகரிப்பு நிலையத்தின் பெறுமதி கணக்கீடு செய்யும் போது ரூபா 3,785,870 பெறுமதி வரியின் பெறுமதி மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டில் நிர்மாணிக்கப்பட்ட ரூபா 103,452 ஆன பெரட் நிலையத்தின் பெறுமதி மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) பிபில பொது நூலகத்தினை இலத்திரன் மயமாக்கப்பட்ட நூலகமொன்றாக மாற்றுவதற்கு உபகரணங்களை கொள்வனவு செய்வற்காக ரூபா 900,000 பொது வைப்புக் கணக்கில் செலவு வைக்கப்பட்டு செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், பொது வைப்பு கணக்கிலிருந்து அகற்றி மூலதன மானியங்கள் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) கணவேகல்ல பட்டுபான ஓயாவின் ஊடாக பாதுகாப்பு வேலியை நிர்மாணிக்கும் ஒப்பந்தத்திற்குரிய 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் கிடைத்த ரூபா 1,986,637 தொகை பொது வைப்புக் கணக்கில் செலவு வைக்கப்பட்டு செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், பொது வைப்புக் கணக்கிலிருந்து அகற்றி மூலதன மானியங்கள் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) பிரதேச சபைகளை பலப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டத்திற்குரிய முன்னைய ஆண்டிற்காக கிடைக்க வேண்டிய ரூபா 551,895 தொகை கிடைக்க வேண்டிய மூலதன மானியங்களாக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஊ) கட்டிங்கள் மற்றும் பொருத்திகளுக்காக செலவிடப்பட்ட ரூபா 294,480 தொகை மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை.

(எ) மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்த மற்றும் நன்கொடையாக கிடைத்த ரூபா 308,065 பெறுமதியான அலுவலக உபகரணங்கள் மற்றும் தளபாடங்கள், பொருத்திகள் மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை.

(ஏ) நிலையான கட்டளையின் பேரில் உள்நாட்டுக் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்திற்கு செலுத்தப்பட்டிருந்த ரூபா 2,062,120 ஆன செலவினம் கடன்கொடுத்தோர் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டமையால் செலவினக் கடன்கொடுத்தோர் மற்றும் காசு மீதி அப்பெறுமானத்தினால் கூடுதலாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஐ) மீளாய்வாண்டிற்காக செலுத்த வேண்டிய ரூபா 120,000 ஆன சபை செயலாளர் படிகள் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஒ) முன்னைய ஆண்டிற்காக கிடைக்க வேண்டிய ரூபா 497,750 ஆன நிலுவை கடை வாடகையின் கீழ் கணக்கீடு செய்து மீளாய்வாண்டின் வருமானத்திற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது.

(ஓ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டிய நிலையான வைப்பு வட்டி வருமானம் ரூபா 2,137,770 ஆக இருந்த போதிலும், அது ரூபா 6,759,229 என ரூபா 4,621,459 கூடுதலாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

### 1.3.2 இணக்கம் செய்யப்படாத கணக்குகள்

06 கணக்கு விடயங்களுக்குரிய நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 6 கணக்கு விடயங்களின் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 39,322,333 ஆக இருந்ததுடன், பதிவேடுகள் மற்றும் பட்டோலைகளின் பிரகாரம் மீதி ரூபா 40,051,225 ஆக இருந்தது.

### 1.3.3 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

**செலுத்த வேண்டிய கணக்குகள்**

(i) உடன்படிக்கை கைச்சாத்திடும் போது அறவிடப்பட்டிருந்த ரூபா 190,969 தொகையான முத்திரைக் கட்டணங்கள் உள்நாட்டு இறைவரி ஆணையாளருக்கு அனுப்புவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) நீண்டகாலமாக இருந்து வரும் ரூபா 643,495 தொகையான செலுத்த வேண்டிய உள்ளூராட்சி ஓய்வூதிய மீதிகளை மீளாய்வாண்டின் போதும் தீர்வு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுத்திருக்கவில்லை.

### 1.3.4 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாத காரணத்தால் ரூபா 349,946,458 ஆன சொத்து விடயமொன்றும் ரூபா 4,917,193 கூட்டுத்தொகையான 03 பொறுப்பு விடயங்கள் கணக்காய்வின் போது திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தன.

### 1.3.5 இணக்கமின்மைகள்

**சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள்**

சட்டங்கள், விதிகள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் தொடர்பு | பெறுமதி | இணக்கமின்மை |
| --- | --- | --- |
| | ரூபா | |
| (அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டம் | | |
| (i) 139 ஆம் பிரிவு | - | வீதவரி விதிப்பதற்கு கீழ் ஏதேனும் வீடொன்றின் கட்டிடமொன்றின் காணி யொன்று அல்லது வீடொன்றின் வருடாந்த பெறுமதி மதிப்பீடு செய்யக் கூடிய வகையில் தவணை அறிக்கை கோருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) 159 ஆம் பிரிவு | 7,539,424 | மீளாய்வாண்டின் இறுதியில் நிலுவை வருமானம் அறவிடப்பட்டிருக்கவில்லை. |
| (iii) 158, 162 மற்றும் 163 ஆம் பிரிவுகள் | 4,445,237 | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவை வீதவரி தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் | | |
| (i) நி.பி 103 மற்றும் 104 | - | 2014 ஆம் ஆண்டிலிருந்து இடம் பெற்றிருந்த வாகன விபத்துக்கள் தொடர்பில் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (ii) நி.பி 1645 | - | சபைக்குச் சொந்தமான ஒவ்வொரு வாகனம் தொடர்பாக அதன் விபரங்கள் உள்ளடக்கப்பட்டு சம்பவப் பதிவேட்டுப் புத்தகங்கள் நாளதுவரையாக பேணப்பட்டிருக்கவில்லை. |
| (இ) 2016 திசெம்பர் 29 ஆந் திகதிய 30/2016 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கை | | சபைக்குச் சொந்தமான 06 வாகனங்கள் தொடர்பாக எரிபொருள் எரிவு தொடர்பான பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 1986 மார்ச் 10 ஆந் திகதிய 392/9 ஆம் இலக்க அதிவிஷேட வர்த்தமானி பத்திரம் மற்றும் நகர அபிவிருத்தி அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகத்தின் 1985 மார்ச் 20 ஆந் திகதிய 08/01/38 ஆம் இலக்க சுற்றறிக்கை | (i) | சபை அதிகாரப் பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்டிருந்த 04 நிர்மாணங்கள் தொடர்பாக திட்டமிடல் குழு அங்கீகாரம் வழங்கப்பட்டிருக்க வில்லை. |
| | (ii) | சபையினால் 2014,2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் அங்கீகரிக்கப் பட்டிருந்த கட்டிட திட்டங்களுக்கு இடையே 162 திட்டமிடல் விண்ணப்பங்களுக்கு இணக்கச் சான்றிதழ் வழங்கப்பட்டிருக்கவில்லை. |
| (உ) 1988 மே 17 ஆந் திகதிய 22/1988 ஆம் இலக்க உள்ளுராட்சி மன்ற சுற்றறிக்கை | - | குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்த 131 வாடகை மதிப்பீடு செய்யப்பட்டிருக்க வில்லை. |

## 2 நிதி மீளாய்வு

---

### 2.1 நிதி விளைவுகள்

---

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந் ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 32,367,704 ஆக காணப்பட்டதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 19,103,448 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிருவாகம்

---

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

---

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரித்தாக சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | 2017 | | | | 2016 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான விடயம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம | பட்டியலிட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் நிலுவை |
| | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. |
| வீதவரி மற்றும் வரி | 11,320,250 | 11,527,795 | 7,572,993 | 3,954,802 | 9,640,756 | 9,581,069 | 5,703,312 | 3,918,557 |
| வாடகை | 6,853,200 | 9,863,548 | 3,503,560 | 6,359,988 | 6,489,000 | 6,489,000 | 2,724,366 | 3,764,634 |
| அனுமதிப்பத்திர கட்டணங்கள் | 150,000 | 150,000 | 144,050 | 5,950 | 125,000 | 125,000 | 132,500 | - |
| ஏனைய வருமானம் | 8,642,999 | 8,642,999 | 15,943,210 | - | 4,630,000 | 4,630,000 | 8,906,947 | - |
| மொத்தம் | **26,966,449** | **30,184,342** | **27,163,813** | **10,320,740** | **20,884,756** | **20,825,069** | **17,467,125** | **7,683,191** |

#### 2.2.2 வருமான சேகரிப்பின் செயலாற்றல்

---

மீளாய்வாண்டில் பட்டியலிடப்பட்ட வருமானம் ரூபா 30.1 மில்லியனான மொத்த வருமானத்தில் ஆண்டின் இறுதி வரையில் ரூபா 27.1 மில்லியன் வருமானம் சேகரிப்பட்டிருந்ததுடன், அது பட்டியலிடப்பட்ட பெறுமதியில் 90 சதவீதமாக இருந்தது.

#### 2.2.3 வீதவரி மற்றும் வரி

---

(அ) மீளாய்வாண்டில் பட்டியலிடப்பட்ட ரூபா 3,213,266 தொகையான வீதவரி வருமானத்தில் மீளாய்வாண்டின் இறுதி வரையில் ரூபா 1,365,080 தொகை சேகரிக்கப்பட்டிருந்ததுடன் அது பட்டியலிடப்பட்ட வருமானத்தில் 43 சதவீதம் அளவிலான மிகை குறைந்த பெறுமதியொன்றாக இருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் காணப்பட்ட ரூபா 5,566,870 தொகையான நிலுவை வீதவரி வருமானத்தில் ஆண்டின் போது ரூபா 2,574,025 சேகரிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் நிறுவை வீதவரி அறவிடும் சதவீதம் 46 அளவிலான மிகவும் குறைந்த பெறுமதியொன்றாக இருந்தது.

**2.2.4 ஏனைய வருமானம்**

(அ) 03 நிறுவனங்களினால் சபை அதிகாரப் பிரதேசத்தில் வெவ்வேறு இடங்களில் பொருத்தப்பட்டிருந்த 03 நிரந்தர விளம்பர பதாதைகளுக்காக 2016 ஆம் ஆண்டு முதல் அறவிடப்பட வேண்டிய ரூபா 52,500 தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சபை அதிகாரப் பிரதேசத்தில் நடாத்திச் செல்லப்படும் இலங்கை சுற்றுலா சபையில் பதிவு செய்யப்பட்ட ஹொட்டெல் மற்றும் 03 தங்குமிட விடுதிகளில் 01 சதவீதமான வரி அறவிடப்பட்டிருக்கவில்லை.

**2.2.4 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

மாகாண சபையின் பிரதான செயலாளரிடமிருந்தும் மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்தும் 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு கிடைக்க வேண்டியிருந்த நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 2,382,715 மற்றும் முத்திரை கட்டணங்கள் ரூபா 4,983,655 ஆக இருந்தது.

**3 செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயலாற்றல்**

பிரதேச சபை சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுச் சுகாதாரம், மக்கள் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் கட்டுப்படுத்தல், மக்களின் நலனோம்புகை மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டிய பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பான வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

**(அ) உப விதிகள்**

பிரதேச சபை சட்டத்தின் 126 ஆவது பிரிவின் கீழ் 30 பிரதான விடயங்களை நிறைவேற்றுவதற்காக உப விதிகள் பிறப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரை 22 பிரதான விடயங்களுக்கு மாத்திரம் உப விதிகள் பிறப்பிக்கப்பட்டிருந்தன.

**(ஆ) செயல்நடவடிக்கைத் திட்டம்**

பிறப்பிக்கப்பட்ட உப விதிகளின் பிரகாரம் சபையினால் நிறைவேற்றப்பட வேண்டிய பணிகள் தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**(இ) திண்மக் கழிவுப்பொருள் முகாமைத்துவம்**

(i) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 1816/43 ஆம் இலக்க 2013 யூன் 28 ஆந் திகதிய வர்த்தமானி பத்திரத்தின் மூலம் வெளியிடப்பட்ட ஊவா மாகாண உப விதிகளை பின்பற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்த போதிலும் அதன் 13 ஆவது பிரிவின் 2 ஆம் பிரிவின் பிரகாரம் கழிவுப்பொருள் வரி விதிக்கப்பட்டு மீளாய்வாண்டில் செலவிடப்பட்டிருந்த கழிவுப் பொருள் முகாமைத்துவ செலவினம் மீள் நிரப்பட்டிருக்கவில்லை.

(ii) கழிவுப்பொருள் முகாமைத்துவம் தொடர்பாக சபையினால் சபையினால் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) கழிவுப்பொருள் முகாமைத்துவ செயற்திட்டத்திற்காக 2009 ஆம் ஆண்டில் மாகாண திட்டவட்டமான அபிவிருத்தி மானியத்தின் கீழ் கிடைத்த ரூபா 1,484,376 மற்றும் சபை நிதியத்திலிருந்து ரூபா 94,915 செலவிடப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் சேதனப் பசளை உற்பத்தி நடவடிக்கை இடம் பெறவில்லை.

**(ஈ) நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்து கொள்ளல்**

நிலைபேரான அபிவிருத்தி நோக்கங்கள் தொடர்பான 2030 நிகழ்ச்சி நிரல் பிரகாரம் சபை அறிந்துகொள்ளாததன் காரணமாக அந் நோக்கங்களுக்கான உலகலாவிய குறிகாட்டிகள் மூலம் சபை அதிகாரப் பிரதேசத்தில் பொது மக்களின் வாழ்க்கை நிலைமை மற்றும் சுகாதாரத்தை மேம்படுத்துவதற்கான நீண்டகாலத் திட்டம் 2018 மே 28 ஆந் திகதி அளவிலும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.2. செயற்பாட்டு வினைத்திறனின்மை

(அ) பல நோக்கு கட்டிடத்தின் 02 கடைகள் பிரதான அமைச்சரின் அங்கீகாரத்தின் பேரில் இரண்டு குறைந்த வருமானம் பெறுவோருக்கு வழங்குவதற்காக தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது அக்கடைகள் எவ்வித செயற்பாட்டிற்கும் பயன்படுத்தப்படாமல் விளைவற்றுக் காணப்பட்டன.

(ஆ) 1987 இன் 15 ஆம் இலக்க 19(xi) மற்றும் 19(xii) பிரிவுகளின் பிரகாரம் சபைக்கு சொந்தமான காணியொன்று அல்லது கட்டிடமொன்று 03 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் வாடகைக்கோ அல்லது குத்தகைக்கோ வழங்கும் போது அமைச்சரின் எழுத்து மூலம் முன்அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய போதிலும் அவ்வாறான அங்கீகாரமொன்று பெற்றுக்கொள்ளாமல் சபைக்கு சொந்தமான பல நோக்கு கட்டிடத்தின் 05 கடைகள் 15 வருடங்களுக்காக குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தன.

(இ) குத்தகை காலம் திட்டவட்டமாக குறிப்பிடாமல் குத்தகையாளருடன் உடன்படிக்கை செய்யப்பட்ட 181 கடைகள் தொடர்பாக மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் குறித்த குறைபாடுகள் சரி செய்யப்படாமல் மீண்டும் உடன்படிக்கையில் கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை.

## 3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 3.3.1 கையேற்கப்படாத சொத்துக்கள்

சபையின் 50 மயானங்களின் உரித்தினைக் கையேற்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.4 பெறுகைகள்

### 3.4.1 பெறுகை திட்டம்

மீளாய்வாண்டிற்காக பிரதேச சபையினால் வருடாந்த பெறுகை திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.4.2 ஒப்பந்த நிர்வாகம்

(அ) சபை நிதியத்திலிருந்து மேற்கொள்ளப்படும் நிர்மாணங்களுக்காக சாத்தியவள ஆய்வொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2017 நவம்பர் திகதியிடப்படாத 12/3/10/07 ஆம் இலக்க உள்ளூராட்சி மன்ற ஆணையாளரின் கடிதத்தின் பிரகாரம் சபையினால் நிறைவேற்றப்பட்ட செயற்திட்டங்கள் மூலம் நலனாலி மக்களின் எதிர்ப்பார்ப்பு நிறைவேற்றப்படுகின்றதா மற்றும் பராமரிப்பு நடவடிக்கை மேற்கொள்வது தொடர்பாக பின்தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் அதற்காக பொருத்தமான நடைமுறையொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 04. நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டிற்காக பிரதேச சபையின் பாதிடப்பட்ட வருமானம், செலவினம் மற்றும் உள்ளபடியான வருமானம், செலவினங்களுக்கிடையே கருத்திற் கொள்ளக்கூடிய விலகல்கள் அவதானிக்கப்பட்டதால் பாதீடு ஆக்கபூர்வமாக கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 4.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு

மீளாய்வாண்டிற்காக சபையின் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு போதியளவில் நடாத்தப்பட்டிருக்கவில்லை.

## 05 முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது இனங்காணப்பட்ட குறைபாடுகள் சபையின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டதுடன். பின்வரும் கட்டுப்பாட்டு துறைகள் தொடர்பாக சபையின் விஷேட கவனம் கோரப்படுகின்றது.

| | முறைமைகள் | | குறைபாடுகள் |
|---|---|---|---|
| (அ) | கணக்கீடு | | கணக்கேடுகள் மற்றும் பதிவேடுகள் நாளதுவரையாக பேணப்படாமை. |
| (ஆ) | மனித வள முகாமைத்துவம் | (i) | பதவியணியினர் அங்கீகரித்துக் கொள்ளப்படாமை. |
| | | (ii) | நிரந்தர பதவிக்குரியதல்லாத கடமைகளை கையளித்தல். |
| (இ) | செயற்திட்டங்கள் | | போதியளவு மேற்பார்வையொன்று இல்லாமை. |
| (ஈ) | வருமான நிர்வாகம் | | பதிவேடுகளை நாளதுவரையாக பேணாமை |
| (உ) | சொத்துக்கள் கட்டுப்பாடு | | சபைக்குச் சொந்தமான காணிகளை கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்காமை. |